# பத்திரிக்கை செய்தி

சமூகநல இயக்கக கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் அரசு குழந்தைகள் காப்பகங்கள் / அரசு சேவையில்லங்களில் இளநிலை இல்லக்காப்பாளர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.எஸ்.பிரபாகர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளர்.

----

ஈரோடு மாவட்டத்தில், அரசு குழந்தைகள் காப்பகங்கள் / சேவையில்லங்களில் பயின்ற முன்னாள் மாணவிகளிடமிருந்து இளநிலை இல்லக்காப்பாளர் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அரசு சேவை இல்லங்களில் உள்ளுறைவோராக தங்கி பயின்ற முன்னாள் மாணவிகளாக இருக்க வேண்டும். பள்ளி இறுதி வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து வேலை வாய்ப்பு அட்டை கைவசம் வைத்திருக்க வேண்டும். வயது வரம்பு 25 முதல் 35 வயது வரை இருக்க வேண்டும். ஆதரவற்றோர், விதவைகள் மற்றும் கணவனால் கைவிடப்பட்டவர்கள் எனில் 25 வயது முதல் 40 வயது வரை இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் விண்ணப்பத்தினை சமூகநல இயக்குநர், சமூகநல இயக்குநரகம், பனகல் மாளிகை, 2-வது தளம், சைதாப்பேட்டை, சென்னை -15 என்கின்ற முகவரிக்கு மாவட்ட ஆட்சியரக வளாகத்தில் உள்ள மாவட்ட மறுவாழ்வு அலுவலக மேல் தளத்தில் உள்ள மாவட்ட சமூகநல அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பத்தினை 03.10.2017-க்குள் விண்ணப்பிக்குமாறும், மேலும் இவ்விண்ணப்பத்தினை ஈரோடு மாவட்டத்தின் இணையதளம் (www.erode.tn.nic.in ) பதிவிறக்கம் செய்தும், விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
ஈரோடு மாவட்டம்.

**படிவம்**

| | | |
|---|---|---|
| 1 | பெயர் | |
| 2 | பிறந்த தேதி | |
| 3 | கல்வித் தகுதி | |
| 4 | இனம் | |
| 5 | சேவையில்லத்தில் கல்வி பயின்ற வகுப்பு மற்றும் ஆண்டுகள் | |
| 6 | விடுவிக்கப்பட்ட நாள் | |
| 7 | ஆதரவற்றவர் / கணவனால் கைவிடப்பட்டவர் / விதவை சான்று சமர்ப்பிக்க வேண்டும் | |
| 8 | வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த நாள் | |
| 9 | வேலைவாய்ப்பக அட்டை எண்/நாள் மற்றும் புதுப்பித்த நாள் | |
| 10 | எந்த மாவட்டத்திலும் பணி செய்ய விருப்பம் | உண்டு/ இல்லை |
| 11 | முன் அனுபவ விபரம் | |

மனுதாரரின் கையொப்பம்